**நோவுட் பிரதேச சபை - 2024**

---------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

நோவுட் பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நோவுட் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை

மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1))(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்** | | | |
| (அ) 24(1) (அ), (ஆ) ஆம் பிரிவுகள் | சபைக்கு சொந்தமான 71 வீதிகள அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வீதிகளை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்குச் சொந்தமான வீதிகளை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு தேவையான நடவடிக்கை வேண்டும். |
| (ஆ) 47 மற்றும் 52 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டிலும் இனங் காணப்பட்டிருந்த 13 அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு தேவையான நடலடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக. | அத்து மீறிய நிர்மாணம் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,000,429 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 62,920,319 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 4,880,000 | 2,851,694 | 2,910,162 | 187,800 | 3,580,000 | 3,531,098 | 3,534,717 | 246,268 |
| (ii) | வாடகை | 15,036,645 | 14,297,705 | 13,533,537 | 3,220,413 | 11,988,450 | 10,265,599 | 9,856,210 | 2,456,245 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 4,350,500 | 2,946,842 | 2,946,842 | - | 2,900,000 | 3,482,364 | 3,482,364 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 23,959,080 | 23,734,777 | 28,571,934 | 11,788,022 | 16,000,000 | 16,558,265 | 8,859,411 | 16,625,179 |
| | | 48,226,225 | 43,831,018 | 47,962,475 | 15,196,235 | 34,468,450 | 33,837,326 | 25,732,702 | 19,327,692 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

#### (அ) வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்ன் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 187,800 ஆன வீதவரி நிலுவை மீதி ஒன்று காணப்பட்டதுடன் அதில் அலகொன்று ரூபா 2,000 இற்கு மேற்பட்ட 29 அலகுகளிலிருந்து ரூபா 136,687 ஆன நிலுவை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

#### (ஆ) இறைச்சிக் கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 3,074,318 ஆன இறைச்சி கடை வாடகை நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது அதில் 1 இற்கு மேற்பட்ட மற்றம் 5 இற்கு குறைந்த மீதி ரூபா 1,771,858 தொகையையும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 1,302,460 தொகையையும் | எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

அறவிடுவது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க ப்பட்டிருக்கவில்லை.

**(இ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 715,736 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 10,595,001 ஆக இருந்தது. | அட்டவணைகளை சமர்ப்பித்து கட்டணங்களை அறவிட்டுக் கொள்வதாக. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) பொதுமக்கள் சுகாதாரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 03 மூலாதாரங்களில் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட நீர் மாதிரி பரிசோதனையின் பிரகாரம் இருக்க வேண்டிய நியம தரம் இல்லாதிருக்கையில் சுத்திகரிக்கப் படாமல் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டிருந்தது. | முறையான நீர் மாதிரி பரிசோதனையொன்று மேற்கொண்டு நீர் சுத்திகரிக்கப்படுவதாக. | நீர் சுத்திகரிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட வேண்டும். |

**(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| மாதாந்தம் சேகரிக்கப்படும் 20 தொன் அளவிலான கழிவு பொருட்கள் எவ்வித முகாமைத்துவம் ஒன்று இன்றி கழிவுப்பொருள் தொகுதிக்கு வெளியேற்றப்பட்டு இருந்ததுடன் அதன் காரணமாக சுற்றாடலுக்கும் பொதுமக்கள் சுகாதாரத்துக்கும் பாதகமாக தாக்கம் அளித்திருந்தது. | எதிர்வரும் காலங்களில் நடவடிக்கைகள் எடுப்பதாக. | திண்மக் கழிவுப் பொருள் வெளியேற்றுவதை முறையாகவும் முகாமைப்பு டுத்த வேண்டும். |

**(இ) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்**

| | | |
|---|---|---|
| ரூபா 900,660 ஆன மதிப்பிடப்பட்ட பெறுமதியான காசல்ரீ நூலக கட்டிட நிர்மாண அபிவிருத்தி செயற்திட்டம் 2021 திசெம்பர் 10 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவ்வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் இதுவரை ரூபா 640,563 தொகை செலவிடப்பட்டு இருந்தது. செயற்திட்டம் மூன்று ஆண்டுகள் கடந்து இருந்த போதும் உடன்படிக்கை பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டோ வேலைகளை பூர்த்தி செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எஞ்சியுள்ள வேலைகளுக்கான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப் பட்டு, செயற்திட்டத்தின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடியும் என்பதாக. | செயற்திட்டப் பணிகள் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன், அவ்வாறு இல்லா விட்டால் உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு உரிய 03 நீர் செயற் திட்டங்களின் 227 நீர் பாவனையாளர்களுக்காக நீர்மானி பொருத்தப்படாமல் நிலையான கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நீர்மானிகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நீர்மானிகளைப் பொருத்தி கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான கெப் வண்டியை திருத்தம் செய்வதற்காக 2022 திசெம்பர் 24 ஆந் திகதி தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் திருத்த வேலைகள் பூர்த்தி செய்து மீள கையேற்கப்பட்டிருக்கவில்லை. | ஆளுநரின் அங்கீகாரத்தின் பின்னர் கொடுப்பனவு செய்து மீத பொறுப்பேற்பதாக. | திருத்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2016 மார்ச் 17 ஆம் திகதிய 2016/03 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் குத்தகை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு குத்தகையாளர்களுடன் உடன்படிக்கை மேற்கொள்ளாமல் சபைக்கு சொந்தமான 24 கடைகள் 2024 யூன் முதல் குத்தகையதாரருக்கு வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கு இடமளிக்கப்பட்டு இருந்தது. | மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் உடன்படிக்கை மேற்கொள்வதாக. | உடன்படிக்கை செய்யப்பட்ட பின்னர் கடைகளை குத்தகைக்கு வழங்கி வாடகை அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 ஜூலை 01 ஆம் திகதி இடம் பெற்ற கெப் வண்டி விபத்து ஒன்றுக்குரியதாக நிதிப்பிரமாணம் 104(4) பரிசோதனையை பூர்த்தி செய்து பொறுப்பான தரப்பினர் இனங் காணப்பட்டு நட்டத்தை அறுபடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிச் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டு இருந்த போதும் நட்டத்தை மதிப்பீடு செய்துள்ளதாகவும் எதிர்வரும் புலனாய்வு உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் என்பதாகவும். | பரிசோதனையை பூர்த்தி செய்து நட்டத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) 2020 செப்தம்பர் 28 ஆந் திகதிய 2020/06 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் பிரகாரம் சபைக்கு சொந்தமான மிகை நிதியை வருமானம் ஈட்டக்கூடிய திட்டங்கள், சபை சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் அல்லது பெரும்பான்மையான மக்களுக்கு பொது வசதிகளை வழங்கக் கூடிய செயற் திட்டங்களில் பயன்படுத்த முடியுமாக இருந்த போதிலும் சபையால் ரூபா 20,000,000 தொகை அவ்வாறு செய்யாமல், நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் மிகை பணத்தை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | மிகை பணம் பிரதேச அபிவிருத்திக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான இரட்டை கெப் ஒன்று 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக திருத்தம் செய்யப்படாமல் பயன்பாட்டுக்கு எடுக்க முடியாமல் சபைவளவில் விளைவற்று காணப்பட்டது. | திருத்த வேலைகளுக்காக அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை பயன்படுத்தப்படும் 29 காணி மற்றும் கட்டிடங்களின் மற்றும் 04 வாகனங்களை உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி செயலாளர் நூலகர், வருமான பரிசோதகர், வேலை பரிசோதகர், மின்சார நிபுணர், தகணச்சாலை செயற்பாட்டாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழில்நுட்ப உத்தியோகத்தர், தொழில்நுட்ப உதவியாளர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், அலுவலக உதவியாளர், வெளிக்கள தொழிலாளர் மற்றும் தொழிலாளர், சாரதிகள் உட்பட 16 பதவிகளில் 61 வெற்றிடங்கள் காணப்பட்ட காரணத்தினால் சபையில் செயலாற்றல் மற்றும் பொது மக்கள் சேவைகளை நிறைவேற்றும் செயற்திறன் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புமாறு பிரதான செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக. | வெற்றிடங்களை பூரணப்படுத்தி பொதுமக்கள் சேவைகளை செயற்திறனாக நடாத்திச் செல்லல் வேண்டும். |